# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**மனு எண். 698/நகராட்சி/2019**
**நாள் : 24/06/2019**

வேலூர் மாவட்டம், ஆற்காடு, கதவு எண்.3A/11, பாஷா தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு அ. திருவரங்கம் அவர்களின் 11.06.2019 நாளிட்ட மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வேலூர் மாவட்டம், ஆற்காடு, கதவு எண்.3A/11, பாஷா தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு அ. திருவரங்கம் என்பவரின் 27.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு, 20.05.2017 நாளிட்ட இம்முறை நடுவ ஆணை எண்.130/2017–இல் உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில், முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட ஆணையினை இரத்து செய்யக்கோரி 08.04.2017 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்தார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் மற்றும் அச்சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் பிறப்பித்த ஆணையொன்றினை மறுபரிசீலனை செய்யக் கோரும் மேல்முறையீட்டு மனுவினை ஏற்பதற்கு வழிவகை செய்யப்படவில்லை என 12.04.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.63/2019–இல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்ட பின்பும் தனது 11.06.2019 நாளிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ளார். இந்நேர்வில், மனுதாரருடைய முறையீடு ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு, உரிய ஆணைகள் இடப்பட்டுள்ளன. எனவே, இம் மனுவின் மீது புதிதாக ஆணை ஏதும் இடும் நிலை எழவில்லை என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு ஜூன் திங்கள், 24–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.
23.6.19
27/6/19

பெறுநர்

1. திரு அ. திருவரங்கம்,
 கதவு எண் 3 A/11, பாஷா தெரு,
 ஆற்காடு – 632 503, வேலூர் மாவட்டம்

2. நகராட்சி ஆணையர்,
 ஆற்காடு நகராட்சி,
 ஆற்காடு, வேலூர் மாவட்டம்

நகல் முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி